1969 பிப்ரவரி 26]

தில இருக்கிறது. அதோடு பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு நல்ல கட்டடங்களும் இல்லாமல் இருக்கிறது. இக் குறையை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது மூலக் கேள்விக்குப் புறம்பாக இருப்பதால், தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு மருத்துவ மனை என்று இல்லாவிட்டாலும் நகர பஞ்சாயத்து களிலே மருத்துவ மனை ஏற்படுத்த சர்க்கார் யோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப் போது ஏறத்தாழ 205 மெட்டர்னிடி சென்டர்கள் முனிசிபாலிடி மூலமாக நடந்து கொண்டு வருகின்றன.

பள்ளிகளுக்குக் கட்டட மானியம்

*81 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :
திரு ரா. ரா. முனுசாமி: } மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா—

உயர்தர பாடசாலை, ஆரம்பப் பாடசாலை, உயர்தர ஆரம்பப் பாடசாலை ஆகியவைகளுக்கு முறையே கட்டடங்கள் கட்டுவதற்கு சர்க்காரால் எவ்வளவு பணம் மானியமாகக் கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த விவர அறிக்கை யிலே 50 சத விகிதம் என்று சொல்லிவிட்டு அதில் குறிப்பிட்ட தொகைகள் எல்லாம் உயர்தரப் பாடசாலை, உயர் தொடக்கப்பள்ளி என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு கட்டக் கூடிய கட்டடங்களினுடைய மதிப்பின் அடிப்படையில் 50 சத விகிதம் கொடுக்கப்படுகிறதா அல்லது எது குறைவாக இருக் கிறதோ அந்த அடிப்படையிலே கொடுக்கப்படுகிறதா? இது நீண்ட நாட்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட தொகை. இப் பொழுது விலைவாசி உயர்ந்திருக்கிறது. ஆகவே, கட்டடத்தி னுடைய மதிப்பின் அடிப்படையில் 50 சத விகிதம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இருக்கிற முறை தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐம்பது சத விகிதம் அல்லது எது குறைவாக இருக்கிறதோ அது கொடுக்கப்படுகிறது தனிப்பட்ட பள்ளிகளுக்கு. நிதி வசதி பெருகும்போது இதைப் பற்றி யோசிக்கலாம்.

---

*717–720-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : மாயூரம் நகராட்சிப் பள்ளிக்கூடம் இடிந்துபோய் மிகவும் சேதப்பட்டுள்ளது. நகராட்சியினர் நிதி வசதி இல்லாததால் கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். அரசு அதற்குத் துணை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றி அனுதாபத்தோடு பரிசீலனை செய்யலாம்.

டால்மியாபுரம் பைலட் சிமென்ட் தொழிற்சாலை

*82 வினா—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், டால்மியாபுரம் அருகே அமைக்கப்பட்டுள்ள பைலட் சிமென்ட் தொழிற்சாலை (Pilot Cement Factory இன்னும் வேலை தொடங்காததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த பைலட் சிமென்ட் தொழிற்சாலை வேலை தொடங்கவில்லை என்று கூறுவது சரியல்ல. இது 1966 நவம்பர் மாதத்தில் வேலை செய்ய ஆரம்பித்து, அதிலிருந்து அவ்வப்போது செயல்பட்டு கொண்டு வருகிறது.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இப்போது ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு டன் சிமென்ட் தயாரிக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது பைலட் ஸ்கீம் என்று சொன்னேன். பைலட் ஸ்கீம் என்றால் செமென்ட் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை அல்ல. உற்பத்தி செய்வதற்குத் தேவையான டிசைன்கள் தயார் செய்வதற்கு பைலட் ஸ்கீம் சிறிய அளவிலே தொடங்கியிருக்கிறோம். எல்லோரும் ஈடுபடக்கூடிய அளவிலே தோற்றுவித்துவிட்டால் டிசைன்கள் அதிகமாக உற்பத்தி செய்வதன் மூலமாக லாபம் கிடைக்கும். டிசைன் உற்பத்தி செய்யும்போது 40 டன், 50 டன் என்ற அளவிற்குத்தான் வருகிறது.

திரு. டி. தங்கப்பன் : தலைவர் அவர்களே, சிமென்ட் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப் பொருள் கிடைக்கின்ற இடத்திலேதான் சிமென்ட் தொழிற்சாலை அமையமுடியும். இராமநாதபுரத்திலே கோரல் ஸ்டோன்ஸ், சுண்ணாம்புக் கற்கள் நிறைய கிடைக்கின்றன. அப்படிப்பட்ட மூலப்பொருள் கிடைக்கின்ற இடத்தில் சிமென்ட் தொழிற்சாலை ஆரம்பித்தால் லாபமாக இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில் ஆரம்பிக்க அரசாங்கம் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சுண்ணாம்புக் கற்கள் தமிழ் நாட்டில் பல இடங்களில் கிடைக்கின்றன. எந்த இடத்திலே அமைத்தால் அதிகமான டன் உற்பத்தி செய்ய முடியுமோ, அந்த இடத்திலே ஆரம்பிக்கிறோம். அப்போது நான் போக்குவரத்து